**ஒபெக் நிதியளிக்கப்பட்ட ஏ017 வீதி நடைபாதையின் புனரமைப்பு செயற்திட்டம் (றக்வான – சூரியகந்த) - 2023**

---

ஒபெக் நிதியளிக்கப்பட்ட ஏ017 வீதி நடைபாதையின் புனரமைப்பு செயற்திட்டத்தின் (றக்வான – சூரியகந்த) 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இச்செயற்திட்டமானது 2019 சனவரி 01 இல் நடாத்தப்பட்ட அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்றது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள் நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் தகவல்களின் பிரகாரம், நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. சப்ரகமுவ மாகாணத்தில் றக்வானவில் ஆரம்பிக்கும் 130.6 கிமீ மற்றும் சூரியகந்தவில் முடிவடையும் 112.6 கிமீ இலங்கையிலுள்ள ஏ017 வீதி நடைபாதையின் 18.0 கிமீ ஐ புனரமைப்பது செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். பொருளாதார நடவடிக்கையை ஊக்குவிக்க எதிர்பார்த்து இணைப்பு மற்றும் அணுகுமுறையினை மேம்படுத்துதல் மற்றும் இலங்கையில் பொது சமுக-பொருளாதார அபிவிருத்திக்கு பங்களித்தல் என்பன செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த குறிக்கோளாகும். நடைபாதையானது இரண்டு பக்கங்களிலும் கடினமான மற்றும் மிருதுவன ஓரங்களுடன் (shoulders) ஓர் இரண்டு பக்க நெடுஞ்சாலையாக (10.0 m) வடிவமைக்கப்படும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 6,947.2 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 50.54 மில்லியனானதுடன் அதில் ரூபா 5,497.9 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 40 மில்லியன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. கடன் உடன்படிக்கையானது 2019 ஒக்தோபர் 30 இல் கைச்சாத்திடப்பட்டு 2025 திசெம்பர் 25 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்கீட்டுக் குறைபாடு/ கணக்காய்வு விடயம் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 ஆம் திகதிய 15 ஆம் இலக்க கடைசி IPC இன் பிரகாரம் ஒப்பந்ததாரரிடமிருந்து ரூபா 29.72 மில்லியன் தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணம் அறவிடப்பட்டிருந்தது. எனினும் பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 01 இன் பிரகாரம் பேரேட்டுக் கணக்குகளில் இது கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள பெறவேண்டிய மீதி மற்றும் செலுத்த வேண்டிய மீதி என்பன ரூபா 29.72 மில்லியனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 29.32 | இணங்கப்பட்டது. வரவிருக்கும் நிதிக்கூற்றுக்களில் தேவையான திருத்தங்கள் செய்யப்படும், மேலும் இதுபோன்ற பிழைகளைத் தவிர்ப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | நிதிக்கூற்றுக்களில் கையொப்பமிடுவதற்கு முன்னர் கணக்காளர் SLPSAS உடன் இணங்குவதை உறுதி செய்ய வேண்டும். |
| (ஆ) | ரூபா 50 மில்லியன் தொகையான ஆலோசனைக் கட்டணம் மீளாய்வாண்டில் வழங்கப்பட்டுள்ளது. எனினும் இது 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிமை மூலதனத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதன் விளைவாக, உரிமை மூலதனம் ரூபா 50 மில்லியனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் பொறுப்புக்கள் ரூபா 50 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | 50 | இணங்கப்பட்டது. வரவிருக்கும் நிதிக்கூற்றுக்களில் தேவையான திருத்தங்கள் செய்யப்படும். | நிதிக்கூற்றுக்களில் கையொப்பமிடுவதற்கு முன்னர் கணக்காளர் SLPSAS உடன் இணங்குவதை உறுதி செய்ய வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | இந்த செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்படும் நிலையான சொத்துக்கள் இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | - | இணங்கப்பட்டது. காணி சுவீகரிப்பை கையாளும் பிரதேச செயலக அலுவலகங்களுக்கு 2023 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஒப்பந்ததாரரால் IPC மூலம் நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இது PMU இன் கணக்குப் பிரிவுக்கு தெரிவிக்கப்படவில்லை. மேலும் வரவிருக்கும் நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் கையொப்பமிடுவதற்கு முன்னர் கணக்காளர் SLPSAS உடன் இணங்குவதை உறுதி செய்ய வேண்டும். மேலும் தொடர்புடைய வரிசை முகவர்களுடன் முறையான தொடர்பாடல் பேணப்பட வேண்டும். |

**2.2 தீர்க்கப்படாத மீதிகள்**

| கணக்காய்வு விடயம் | தொகை ரூபா மில்லியன் | தீர்க்கப்படாத காலப்பகுதி | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| 2021 ஆம் ஆண்டு முதல் 2023 திசெம்பர் 31 வரை நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்ட ரூபா 31.90 மில்லியன் தொகையான செலுத்த வேண்டியவைகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 31.90 | 2 ஆண்டுகளிற்கு மேற்பட்டது. | இணங்கப்பட்டது. 2024 ஆம் ஆண்டில் செலுத்த வேண்டியவைகளைா தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, தற்போது ரூபா 13.1 மில்லியனில் ரூபா 12.0 மில்லியன் தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டியவைகளை தீர்ப்பனவு செய்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| கூறு | செயற்பாடு | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் சதவீதம் | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் சதவீதம் | கணக்காய்வு விடயம் | தாமதங்களிற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|
| சிவில் வேலைகள் | நிர்மாணம் | 45.8 | 39.17 | இச் செயற்திட்டத்தின் சிவில் நிர்மாண நடவடிக்கைகள் பெறுகை செயன்முறையில் ஏற்பட்ட தாமதம் மற்றும் காணி சுவீகரிப்பில் ஏற்பட்ட தாமதம் காரணமாக 04 வருடங்கள் கழிந்த பின்னர் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் இருந்து | காணி சுவீகரிப்பு, ஏனைய முகவர்களிடமிருந்தான அங்கீகாரங்கள் மற்றும் பெறுகை நடவடிக்கைகளுக்கான நன்கொடையாளர்களின் இணக்கப்பாட்டை பெறுதல் ஆகியவை |

| | | |
|---|---|---|
| | ஆரம்பிக்கப்பட்டிருந்தது. மேலும் செயற்திட்ட காலப்பகுதியினுள் செயற்திட்டச் செயற்பாடுகளை அடைந்துகொள்ள முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | மெதுவாகவே நடைபெற்று வருகின்றன. |

**முகாமைத்துவத்தின் பதில்** இணங்கப்பட்டது. காணி சுவீகரிப்பு மற்றும் ஏனைய முகவர்களின் அங்கீகாரங்கள் போன்ற ஏனைய நடவடிக்கைகள் மெதுவான கட்டத்தில் மேற்கொள்ளப்பட்டன.
எனினும், PMU கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட பெறுகை நடவடிக்கைகளுக்கான நன்கொடையாளர்களின் இணக்கப்பாட்டை பெற்றுக்கொள்வதில் கடுமையான தாமதம் உள்ளது.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** வேலை நிகழ்ச்சித்திட்டம் அவ்வப்போது திருத்தப்பட வேண்டும். மேலும் PMU இன் தேவையான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். மேலும் தேவையற்ற தாமதத்தைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒப்பந்தத்தின் பொது நிபந்தனைகளின் (FIDIC - 1999) 4.2 ஆம் இலக்க உட்பிரிவின் பிரகாரம் ஒப்பந்ததாரர் தனது சொந்த செலவில் செயலாற்றல் பிணையை பெற்றுக்கொள்ள வேண்டும். எனினும், செயலாற்றல் பிணைக்கான செலவினத்திற்காக செயற்திட்டத்தினால் ரூபா 17.4 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | இணங்கப்படவில்லை. ஒப்பந்த நிபந்தனைகளின் 4.2 ஆம் உட்பிரிவின் பிரகாரம் கேள்விக்கான பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை மற்றும் நாணயங்கள் இருந்தால், ஒப்பந்ததாரர் தங்கள் சொந்த செலவில் செயலாற்றல் பிணையை பெற்றுக்கொள்ள வேண்டும் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலே கூறப்பட்டதற்கு முரணாக, இந்த மூன்று பொதிகளுக்காக வெளியிடப்பட்ட கேள்வி ஆவணங்களின் கேள்விக்கான பின்னிணைப்பில் தொகை குறிப்பிடப்படவில்லை. இந்த சூழ்நிலையில் கேள்விக்கான பின்னிணைப்பில் ஒரு தொகை குறிப்பிடப்படவில்லை என்றால், இந்த ஷரத்து பொருந்தாது என 4.2 ஆம் உட்பிரிவு மேலும் குறிப்பிட்டது. எனவே, செயலாற்றல் பிணைக்கான செலுத்தும் உருப்படியொன்று வழங்கப்பட்டுள்ளது. எனினும், எதிர்கால ஒப்பந்தங்களில் செலுத்தும் உருப்படியை நீக்குவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | கேள்வி ஆவணங்களை மதிப்பிடும் போது இந்த விடயங்களை கருத்தில் கொள்வதற்காக PMU TEC இற்கு தெரிவிக்க வேண்டும். |
| (ஆ) | ஒப்பந்தத்திற்கான விபரக்குறிப்புக்களின் 128 மற்றும் 129 ஆம் உட்பிரிவுகளின் பிரகாரம், ஆய்வுகூடம், உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் ஒப்பந்தத்தின் இறுதியில் ஒப்பந்ததாரரிற்கு மீள வழங்கப்படும். எனினும், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | இணங்கப்படவில்லை. வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் உள்ள ஆய்வுக்கூடம் மற்றும் ஆய்வுக் கருவிகள் தேவைகளை விட அதிகமாக இருந்ததுடன் செயற்திட்ட முடிவின் மூலம் புதிய உபகரணங்களைப் பெறுதலை தேவையற்றதாக ஆக்குகிறது. | கேள்வி ஆவணங்களை மதிப்பிடும் போது இந்த விடயங்களை கருத்தில் கொள்வதற்காக PMU TEC இற்கு தெரிவிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கள ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் கணக்கெடுப்பு உபகரணங்களுக்காக செயற்திட்டமானது ரூபா 49.08 மில்லியன் தொகையை மொத்தமாக செலுத்தியுள்ளது. அதன் பிரகாரம், பொறியியலாளர் மதிப்பீட்டை விட ரூபா 27 மில்லியன் தொகை செயற்திட்டத்தால் செலுத்தப்பட்டிருந்தது. சாதகமற்ற ஒப்பந்த நிலைமைகள் ஒப்பந்ததாரர்களுக்கு கூடுதல் நன்மைகளை ஏற்படுத்தக்கூடும் என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | மாதிரி சோதனையின் பிரகாரம் மொத்தமாக ரூபா 670 மில்லியனாக அதிகரித்த பொறியாளர் மதிப்பிடப்பட்ட விலைவிகிதங்களுடன் ஒப்பிடும் போது பெரும்பாலான செலுத்தும் உருப்படிகளின் வழங்கப்பட்ட விலைவிகிதங்கள் 50% முதல் 3042.86% வரை கணிசமான வித்தியாசத்தில் அதிகரித்துள்ளமை அவதானிக்கப்பட்டது. ஒப்பந்ததாரருடன் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நடாத்திய பேச்சுவார்த்தைகள் திருப்திகரமாக காணப்படவில்லை என்பதை இது குறிக்கிறது. | இணங்கப்படவில்லை. கேள்வி செயன்முறையின் போட்டித் தன்மையைக் கருத்தில் கொண்டு, பொறியியலாளரின் மதிப்பீடு கேள்வி மதிப்பீட்டிற்கான வழிகாட்டியாகச் செயற்படுகிறது. மேலும், பிரிவு 36 - கேள்வி ஆவணத்தின் விலை கேள்விகளின் மதிப்பீட்டின் பிரகாரம் பேச்சுவார்த்தைகள் அனுமதிக்கப்படுவதில்லை. மேலும் மதிப்பீட்டின் போது நம்பத்தகாத விலைவிகிதங்கள் ஏனைய கேள்விதாரர்களின் கோரப்பட்ட விலைவிகிதங்களுடன் ஒப்பிடப்படுகின்றன, மேலும் குறிப்பிடத்தக்க முரண் இருந்தால் கேள்விதாரரிடமிருந்து காரணங்கள் கோரப்படுகின்றன. | முன்பக்க ஏற்றுதலால் ஏற்படும் இழப்புகளைக் குறைப்பதற்கு PMU தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டும். |
| (ஈ) | ICTAD - 2009 ஆல் வெளியிடப்பட்ட வீதிகள் மற்றும் பாலங்களின் நிர்மாணம் மற்றும் பராமரிப்புக்கான நிலையான விபரக்குறிப்பின் பிரகாரம், அடித்தளம் மற்றும் நீர்நீக்கத்திற்கான அடிப்படைத் தயாரிப்புக்கான செலுத்தும் அலகு தற்காலிக தொகை ஆகும். எனினும், அதற்கு முரணாக, அனைத்து பொதிகளின் பொறியியலாளர் மதிப்பீடுகள் மொத்த தொகையாக தயாரிக்கப்பட்டு, முறையான அளவீடுகள் இன்றி செயற்திட்டத்தினால் ரூபா 12.51 மில்லியன் தொகை செலுத்தப்பட்டுள்ளது. | இணங்கப்படவில்லை. தற்காலிகத் தொகை (PS) உருப்படியின் கொடுப்பனவு நெருக்கமான மேற்பார்வை உள்ளடங்கிய உண்மையான கள அளவீட்டின் அடிப்படையில் உள்ளதால் முறைகேடுகளுக்கு வழிவகுப்பதால் PS இலிருந்து மொத்தத் தொகைக்கான (LS) செலுத்தும் உருப்படிகள் மாற்றப்பட்டிருந்தன. | செயற்திட்ட பணிப்பாளர் கிரய மதிப்பீட்டை அனுமதிப்பதற்கு முன்னர் ICTAD நிபந்தனைகளுடன் இணங்குவதை உறுதிப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | ஒப்பந்தத்தின் குறிப்பிட்ட நிபந்தனைகளின் 14.2(இ) உட்பிரிவின் பிரகாரம் ஒப்பந்ததாரருக்கு சான்றுபடுத்தப்பட்ட இடைக்கால கொடுப்பனவுகளின் மொத்தம் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத் தொகையில் 30 சதவீதத்தை அடைந்திருந்த போது முற்பண கொடுப்பனவு கழிப்பனவு தொடங்கப்படும். மூன்று பொதிகளுக்காக செயற்திட்டத்தினால் ரூபா 885 மில்லியன் முற்பணக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும், குறைந்த முன்னேற்றம் காரணமாக, முற்பண கொடுப்பனவின் கழித்தல் இது வரை தொடங்கப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்படவில்லை. ஒப்பந்தங்களின் குறிப்பிட்ட நிபந்தனைகளின் 14.2 ஆம் உட்பிரிவின் பிரகாரம் முற்பண கொடுப்பனவின் கழிப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஒப்பந்தத்தின் குறிப்பிட்ட நிபந்தனைகளின் பிரகாரம் செயற்திட்டப் பணியின் பௌதீக முன்னேற்றம் 30% ஐ அடைந்துகொள்ளும் போது 14.2(ஆ) பிரிவு 2வது முற்பண கொடுப்பனவு மேற்கொள்ளப்படும். எனினும், 14.2(இ) உட்பிரிவின் பிரகாரம் நிதி முன்னேற்றம் 30% ஐ விஞ்சும் போது கழிப்பனவு தொடங்கப்படுகிறது. எனினும், 2024.03.31 இல் உள்ளவாறு முற்பண அறவீடு இடம்பெற்றுக் கொண்டிருக்கிறதுடன் பொதி ஏ ரூபா 68.0 மில்லியன், பொதி பீ ரூபா 106.65 மில்லியன், பொதி சீ ரூபா 106.35 மில்லியன் ஏற்கனவே அறவிடப்பட்டது. | செயற்திட்ட பணிப்பாளர் PCOC உடன் இணங்குவதை உறுதிப்படுத்த வேண்டும். |
| (ஊ) | சிவில் பணிகளுக்கான மூன்று ஒப்பந்தப் பொதிகளின் BOQ இன் பிரகாரம் 337 செலுத்தும் உருப்படிகளுக்கு ரூபா 1,296 மில்லியன் மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும், ஒப்பந்தக் காலத்தின் 01 வருடத்திற்கு மேலாகியும், கடந்த இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழ் வரை அந்த உருப்படிகளுக்கான எந்தவொரு கொடுப்பனவும் செயற்திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எனவே அந்த செலுத்தும் உருப்படிகள் BOQ இல் சேர்க்கப்பட்டது கணக்காய்வில் சிக்கல் நிறைந்த பிரச்சினையாக இருந்தது. | இணங்கப்பட்டது. பொறியியலாளர் மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டிய நிர்மாணப் பணிகளுக்கு வழிகாட்டியாக செயற்படுகிறது. எனினும், செயற்திட்டத்தில் பயன்படுத்தப்படாத உருப்படிகளைக் கணிப்பது மிக விரைவானதாகும். எனினும், நாள் வேலை உருப்படிகள் தேவைப்படும் போது மாத்திரமே பயன்படுத்தப்படுகின்றன. | BOQ ஐ அனுமதிப்பதற்கு முன்னர் தேவையற்ற BOQ உருப்படிகளைத் தவிர்ப்பதை செயற்திட்ட பணிப்பாளர் உறுதிப்படுத்த வேண்டும். |
| (எ) | நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் தலைமையில் 2021 ஏப்ரல் 20 இல் நடைபெற்ற அமைச்சின் பெறுகைக் குழுக் கூட்டக்குறிப்புக்களின் பிரகாரம் சூரியகந்த – றக்வான (18 கி.மீ.) புனரமைப்பு செயற்திட்டத்தின் ஒவ்வொரு ஒப்பந்தப் பொதிக்கும் தொழில்தருநரின் தேவைப்பாட்டின் அடிப்படையில் 06 கிலோமீற்றர் வீதம் 03 பொதிகளாகப் | இணங்கப்பட்டது. இந்த வீதி மலைப்பாங்கான நிலப்பரப்பு வழியாகச் செல்கிறதுடன் வெட்டப்பட்ட சரிவுகள் பரவலாக மழைக்கு திறந்திருந்தால் நிலச்சரிவுகளுக்கு உள்ளாகிறது. மேலும், இந்த வீதி சிங்கராஜா வனப் பகுதிக்கு அருகாமையில் உள்ளதால், ஆண்டு முழுவதும் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. வீதியின் 18 கி.மீ நீளத்திற்கு ரூபா 4327 மில்லியன் மதிப்பீட்டில் (பொருளாதார நெருக்கடிக்கு முன்னரான பொறியாளரின் மதிப்பீடு) | ஒப்பந்தத்தை பொதியாக பிரிப்பதற்கு முன்னர் செயற்திட்ட பணிப்பாளர் சம்பந்தப்பட்ட பெறுகைக் குழுவிடம் முறையான அங்கிகாரங்களை பெற்றுக்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அமைச்சு பெறுகை குழுவின் கீழ் பொதி ஏ மற்றும் பீ வழங்கப்பட்டிருந்தது, அதே நேரத்தில் பொதி சீ நிலையான அமைச்சரவை நியமித்த பெறுகைக் குழுவின் கீழ் வழங்கப்பட்டது.<br><br>எனினும், செயற்திட்டத்தை 03 பொதிகளாகப் பிரிப்பதற்கான அத்தகைய முடிவு செயற்திட்டத்தின் பூர்வாங்க செலவினங்கள், மேற்பார்வைக் கட்டணங்கள், செயற்திட்ட மேந்தலை கிரயங்களை அதிகரித்திருந்தன. | செயற்திட்டத்தின் முக்கிய நிர்மாண நடவடிக்கைகளின் செலவு உட்பட மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், மேற்படி சூழ்நிலையில் நிர்மாண காலத்தை 3 ஆண்டுகளாக நீடிக்க வேண்டும். இதன் விளைவாக, ஆலோசகர் மேற்பார்வைக் கட்டணங்கள் அதிகரிக்கின்றதுடன் தெரிவுசெய்யப்பட்ட ஒப்பந்ததாரர் சிறப்பாகச் செயற்படவில்லை என்றால் செயற்திட்டம் தோல்வியடையும். இந்த உண்மைகளை கருத்தில் கொண்டு RDA செயற்திட்ட காலத்தை குறைப்பதற்கு முடிவு செய்தது.<br>அதன் பிரகாரம், 6 கிலோமீற்றர் நீளமுள்ள வீதிக்கு ஒவ்வொரு ஒப்பந்ததாரரும் பொறுப்பேற்று மூன்று பொதிகளாகப் பிரிக்கப்பட்டு, செயற்திட்டத்தின் காலம் 2 ஆண்டுகளாக குறைக்கப்பட்டுள்ளது. | |
| (ஏ) | பெறுகைக் கால அட்டவணையின் பிரகாரம், பெறுகை நிறுவனம் 2022 சனவரி 02 அளவில் ஒப்பந்தத்தை வழங்க திட்டமிட்டிருந்தது, எனினும் பெறுகைக் கால அட்டவணையின் பிரகாரம் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருக்கவில்லை, இது நிர்மாணத்தின் குறைந்த முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். | இணங்கவில்லை.<br>கொடுக்கப்பட்ட பதிலின் பிரகாரம் PMU கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட பெறுகை நடவடிக்கைகளுக்கு நன்கொடையாளர்களின் இணக்கப்பாடடை பெறுவதில் கடுமையான தாமதம் ஏற்படுகிறது. | செயற்திட்ட பணிப்பாளர் அளித்த பதிலின் பிரகாரம் ஒப்படைக்கும் திகதி நீடிக்கப்படாது. எனவே நீட்டிப்பை அனுமதிக்கக் கூடாது. |

**3.3 காணி சுவீகரிப்பு தொடர்பான சிக்கல்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் செயற்திட்டத்தின் நிர்மாணத்திற்காக 1515 காணித் துண்டுகளை சுவீகரிப்பதற்கு பட்டியலிடப்பட்டது. செயற்திட்டம் 789 காணித்துண்டுகளிற்காக 38(அ) பிரிவை மாத்திரமே வெளியிட்டிருந்தது. எனினும், 2023 திசெம்பர் 31 வரை 17 ஆம் பிரிவின் கீழ் எந்தவொரு காணித்துண்டுகளிற்கும் இழப்பீடு மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. காணி சுவீகரிப்பு செயன்முறையின் மோசமான மேற்பார்வை முக்கியமாக தாமதத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தியதுடன் இது எதிர்காலத்தில் செயற்திட்டக் கிரயம் மீறப்படுவதை மோசமாக பாதிக்கலாம். | மேலே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம், நில அளவைத் திணைக்களம் தொடக்கத்தில் வழங்கிய முன்கூட்டிய சுவடு வரைபடத்தின் பிரகாரம் 789 காணித்துண்டுகள் சுவீகரிக்கப்பட வேண்டும். அதனையடுத்து, அந்த அனைத்து காணிகளுக்கும் 38(அ) வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. | காணி சுவீகரிப்பு செயன்முறை முறையான செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| கட்டிடத்தின் 1வது தளத்தில் ஏழு செயற்திட்ட அலுவலகங்கள் இயங்கி வந்த போதிலும் இந்த ஏழு செயற்திட்டங்களுக்கும் நியாயமான முறையில் கட்டிட வாடகை பங்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டில் முழுக் கட்டிடத்திற்கும் ரூபா 10 மில்லியன் வாடகையை செயற்திட்டம் செலுத்தியிருந்தது. | நானாவித வெளிநாட்டு உதவியளிக்கப்பட்ட செயற்திட்டத்தின் கீழ் 07 செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்படுகின்றன. எனவே, ஒவ்வொரு செயற்திட்டத்திற்கும் ஒவ்வொரு மாதத்திற்கான கட்டுநிதி மற்றும் ஒதுக்கீட்டின் கிடைப்பனவுத் தன்மையைப் பொறுத்துத் தொகை அறவிடப்படுகிறது. எனினும் இது 2024 முதல் நடைபெற்றுக்கொண்டிருக்கும் செயற்திட்டத்திற்கிடையே பகிர்ந்தளிக்கப்படும். | நியாயமான முறையில் கட்டிட வாடகை பங்கீடு செய்யப்பட வேண்டியதுடன் முறையான கணக்கீட்டுக் கொள்கை பின்பற்றப்பட வேண்டும். |

### 3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | அரசாங்க பெறுகை வழிகாட்டல்களின் 4.1(ஆ) உட்பிரிவு | பெறுகைத் திட்டம் வரிசை அமைச்சின் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டிருக்காததுடன் வெளிநாட்டு நிதியளிக்கும் முகவரால் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு ஏற்ப பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | இணங்கப்பட்டது. இந்த விடயத்தில் கலந்து கொள்ளுமாறு PMU இற்கு அறிவுறுத்தப்படும். | பெறுகைத் திட்டத்தை தயாரித்து அமைச்சிடம் இருந்து அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு PMU நடவடிக்கையை எடுக்க வேண்டும். |
| (ஆ) | அரசாங்க பெறுகை வழிகாட்டல்களின் 7.9.2 ஆம் இலக்க உட்பிரிவு | குறைந்த மதிப்பிடப்பட்ட பதிலளிக்கக்கூடிய கேள்வியானது பொறியியலாளர் மதிப்பீடுகளை கணிசமான வித்தியாசத்தில் மீறினால், பெறுகை நிறுவனம் புதிய கேள்விகளை பரிசீலிக்கும் அல்லது திருப்திகரமான ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்வதற்கு குறைந்த மதிப்பீடு செய்யப்பட்ட கேள்விதாரருடன் பேச்சுவார்த்தை நடாத்தலாம். எனினும், | இணங்கப்படவில்லை. 2021 ஆம் ஆண்டின் HSR விலைவிகிதங்களின் அடிப்படையில் மேற்படி செயற்திட்டத்தின் பொறியியலாளர் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, 2022 மார்ச் 3 இல் விலை கேள்விகள் திறக்கப்பட்டன. எனவே, கேள்வி திறத்தலில் பொருளின் விலைகளை ஒப்பிடும் | TEC ஆல் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் பிரகாரம் விலை உயர்வுகள் கணிப்பிடப்படுகின்றன என்பதை PMU உறுதிப்படுத்த வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மேற்படி அரசாங்க பெறுகை வழிகாட்டல்களுக்கு முரணாக ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. | போது பொறியியலாளரின் மதிப்பீடு மிகவும் அதிகமாக இருக்கும் என்று TEC கருதுகிறது. கேள்வி காலத்தில் நிர்மாணப் பொருட்களின் விலை மற்றும் எரிபொருள் விலைகள் வேகமாக அதிகரித்துள்ளன. | |
| (இ) | அரசாங்க பெறுகை வழிகாட்டலின் 2.12 ஆம் இலக்க உட்பிரிவு | TEC இன் உறுப்பினர்கள் அதன் முதல் கூட்டத்தில் பிரகடனப் படிவத்தில் கையெழுத்திட்டிருக்கவில்லை. | இணங்கப்பட்டது. தற்போது பெறுகை பணிகளில் ஈடுபட்டுள்ள TEC உறுப்பினர்கள் கையொப்பமிடும் பிரகடனப் படிவங்களை பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | பெறுகை வழிகாட்டல்களுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.6 கள விஜயங்களில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | விபரக்குறிப்பு 103.4 - போக்குவரத்து பாதுகாப்பு மற்றும் கட்டுப்பாட்டு துணைக்கருவிகளின் பிரகாரம் ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்ததாரர் வழங்க வேண்டியதுடன் மூன்று பொதிகளுக்கு கடந்த IPC வரை ரூபா 14 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. எனினும், கள விஜயத்தின் போது, பல இடங்களில் திருப்தியற்ற பாதுகாப்பு நிலைமைகள் காணப்பட்டன, அத்தகைய பாகங்கள் எதுவும் சரி செய்யப்படவில்லை. எனவே, போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லாததால், பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகி வருவது அவதானிக்கப்பட்டது. | இணங்கப்பட்டது. எனினும், அனைத்து ஒப்பந்ததாரர்களும் பொது பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும் பொதுமக்களின் சிரமத்தை குறைப்பதற்கும் தங்கள் பிரதான கவனத்தை செலுத்தியுள்ளனர். அவர்கள் மூன்று பாதுகாப்பு உத்தியோகத்தர்களை, ஒவ்வொரு ஒப்பந்தத்திலிருந்தும் ஒருவரை களத்தை மேற்பார்வையிடுவதற்கு ஒதுக்கியுள்ளனர். மேலும் பாதுகாப்பை விடாமுயற்சியுடன் பேணுவதற்கு தங்களால் முடிந்த முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். | கள பரீட்சிப்பின் போது லொக் பதிவுகளை பொறியியலாளர்கள் வைத்திருக்க வேண்டியதுடன் அதற்கேற்ப கொடுப்பனவு கழிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கள பரீட்சிப்பின் போது வீதி ஓரங்கள், வீதி கிளைகளில் மண் அரிப்பு ஏற்பட்டு, வடிகாண்கள் மற்றும் வாய்க்கால்களில் மண் நிரம்பிய பல இடங்கள் காணப்பட்டன. ஆனால், உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்பட்டது. மலைப்பாங்கான வீதியின் காரணமாக, வீதியின் பல இடங்களில் சிறிய அரிப்பு ஏற்பட்டு, வடிகால் மற்றும் வாய்க்கால்களில் மண்ணால் அடைப்பு ஏற்படுகிறது. இந்த பகுதிகளை விரைவில் அகற்ற ஒப்பந்ததாரர்கள் அடிக்கடி வருகிறார்கள். எனினும், இந்த இடங்களின் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேம்படுத்துவதற்கு மூன்று ஒப்பந்ததாரர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. | பணிகளைத் தொடங்குவதற்கும், ஒப்பந்ததாரர்களின் பணிகளை உன்னிப்பாகக் கண்காணிப்பதற்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட வேண்டும். |
| (இ) | சூரியகந்த – றக்வான செயற்திட்டத்தின் கீழ் வீதி நிர்மாணப் பணிகள் 2022 ஒக்தோபர் 17 இல் ஆரம்பிக்கப்பட்டு 2024 ஒக்தோபர் 16 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. தற்போதைய குறைந்த முன்னேற்றத்தின் பிரகாரம் செயற்திட்டமானது ஆரம்ப பூர்த்தி செய்தல் திகதியான 2024 ஒக்தோபர் 16 இற்கு முன்னர் வீதியின் மிகுதி வீதி நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்யும் நிலையில் இல்லை. அகழ்வாராய்ச்சிகள் மற்றும் பகுதியளவு பூர்த்திசெய்யப்பட்ட கட்டமைப்புக்கள் 2024 பெப்ரவரி 01 வரையிலும் அவதானிக்கப்பட்டன. | இணங்கப்பட்டது. ஒப்பந்தத்தின் திட்டமிடப்பட்ட மற்றும் பௌதீக முன்னேற்றத்திற்கு இடையே குறிப்பிடத்தக்க இடைவெளி உள்ளது<br><br>(பீ) தாமதமான முன்னேற்றத்தைக் கண்டறிவதற்கு ஒப்பந்ததாரருக்கு அறிவுறுத்தப்பட்டது.<br><br>மேலும், அனைத்து ஒப்பந்ததாரர்களும் பாதகமான வானிலை காரணமாக ஒப்பந்தத்தின் நிபந்தனைகளுக்கு இணங்க கால அவகாசத்தை நீட்டிப்பதற்கான கோரிக்கைகளை சமர்ப்பித்துள்ளனர், மேலும் அவை தற்போது மதிப்பீட்டில் உள்ளன. | இந்த விடைக்கும் 1.2.2(ஈ) பந்தி பதிலுக்கும் இடையே வித்தியாசம் உள்ளது. EOT ஐ வழங்குவதற்கு முனனர் PMU உறுதிப்படுத்த வேண்டும், அந்த காலப்பகுதியில் அசாதாரணமான பாதகமான வானிலை நிலவியது. |
| (ஈ) | நிர்மாணப் பணியின் போது தேயிலைத் தோட்டங்கள் சேதமடைந்துள்ளமையும், மண் அரிப்பு மற்றும் நிலச்சரிவு ஏற்படக்கூடிய அபாயகரமான இடங்கள் காணப்பட்டதையும் கள பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது. | இணங்கப்பட்டது. இந்த வீதிப் பகுதி மலைப்பாங்கான நிலப்பரப்பு வழியாக செல்கிறது, இதன் விளைவாக தற்போதுள்ள வீதியை விரிவுபடுத்தும் போது மிக உயரமான சரிவுகள் வெட்டப்படுகின்றன. அதிக வெட்டு சரிவுகள் காரணமாக, வீதியின் சில தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் சிறிய மண் அரிப்பு ஏற்படலாம்.<br><br>எனினும், இந்த அரிப்புக்கள் மிகவும் ஆபத்தானதாக கருதப்படவில்லை, மேலும் அவை காலப்போக்கில் தீர்க்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. | அனைத்து சேதங்களையும் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும் தணிப்பு நடைமுறை அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | எனினும், அவற்றைத் தணிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஒப்பந்ததாரருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | |
| (உ) | இயற்கை வள முகாமைத்துவ நிலையம் வழங்கிய 2021.02.18 ஆம் திகதிய கடிதத்தில் உள்ள வழிகாட்டல்கள் மற்றும் பரிந்துரைகளின் பிரகாரம் மண் அரிப்பைக் குறைப்பதற்கும், சரிவுகளை உறுதிப்படுத்துவதற்கும் நிர்மாணத்தின் போது வெட்டுகள் உருவாக்கப்பட வேண்டும். மேலும், அகழ்வு செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் நிர்மாணத்தில் பயன்படுத்தப்படும் கழிவுப்பொருட்கள் தண்ணீரில் கலப்படம் செய்வதற்கு அனுமதிக்கப்படக்கூடாது. மேலும் தோண்டிய மண்ணை பொருத்தமான குப்பை கொட்டும் இடங்களுக்கு கொண்டு செல்ல வேண்டியதுடன் அரிப்புக்கு உள்ளாகக்கூடாது. எனினும், மண் அரிப்பு இடங்கள் மற்றும் மோசமான வடிகால் வசதிகள் அவதானிக்கப்பட்டன. | இணங்கப்பட்டது. அனைத்து பொருத்தமற்ற மண் மற்றும் கழிவுப்பொருட்கள் செயற்திட்டப் பகுதியிலும் செயற்திட்டத்திற்கு வெளியேயும் அமைந்துள்ள CEA அங்கீகரித்த அகற்றல் முற்றங்களுக்கு அகற்றப்பட்டுள்ளன. மண் அரிப்பினால் ஏற்படும் நீர் மாசுபாட்டை குறைப்பதற்கு ஒப்பந்ததாரர்கள் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளனர். எனினும், இப்பகுதியின் மலைப்பாங்கான தன்மை காரணமாக, ஏராளமான சிறிய ஓடைகள் வீதி முழுவதும் இருப்பதால், நீர் மாசுபடுவதை முற்றிலும் தடுப்பது சவாலாக உள்ளது.<br><br>எனினும், இந்தப் பிரச்சினைகளைத் தணிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஒப்பந்ததாரருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | அனைத்து சேதங்களையும் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் தணிப்பு நடைமுறை அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |
| (ஊ) | பொதுமக்களின் 12 முறைப்பாடுகளுக்குத் தீர்வு காணப்படாதமை கள விஜயங்களில் அவதானிக்கப்பட்டது. மெதுவான முன்னேற்றம் மற்றும் பொதுமக்கள் முறைப்பாடுகளை உடனடியாக கவனிக்கத் தவறியதால் பொது மக்கள் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். | இணங்கப்படவில்லை. இந்த முறைப்பாடுகள் அனைத்தும் ஒப்பந்தத்திற்கான பொறியாளரால் தொழில்தருநருடன் கலந்தாலோசித்து தீர்க்கப்பட்டுள்ளன. | பொதுமக்களின் முறைப்பாடுகள் உடனடியாக பரிசீலிக்கப்பட வேண்டும். |